**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 61/2024**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 சத்தியமூர்த்தி திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) வாதி பெயரில் பாலவிடுதி காவல் நிலையத்தில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. எனது புகாரை உடனே பதிவு செய்தாரா என்றால் அன்றே பதிவு செய்திருக்கலாம். எனக்கு முதல் தகவல் அறிக்கை நகல் கொடுக்கவில்லை. எனது புகாருடன் எந்த ஆவணம் இணைத்துக் கொடுத்தேன் என்றால் எனக்கு வாட்ஸ்அப் மூலம் வந்த செய்தியை நகல் எடுத்துக் கொடுத்தேன். தற்போது அந்த செய்தி எனது கைப்பேசியில் உள்ளதா என்றால் இல்லை அழிந்து விட்டது. புகார் கொடுக்கும் போது மேற்படி செய்தியை ஒரு நகல் மட்டும் கொடுத்தேனா அல்லது வேறு நகல் உள்ளதா என்றால் இல்லை. வாதி ஊரில் ஒரு முக்கிய நபராக இருப்பதால் தான் அரசு அலுவலர்களின் கைப்பேசி எண்ணை பதிவு செய்து வைத்திருக்கிறார் என்றால் இருக்கலாம்.

2) எனது கைப்பேசிக்கு வந்த செய்தியானது வேறு நபர் மூலம் வாதிக்கு வந்து வாதி அதை எனக்கு அனுப்பியருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. பொதுவாக ஒரு செய்தியை தயார் செய்தவர் அனுப்புவதும், வேறு நபரிடமிருந்து வரும் செய்தியை அப்படியே அனுப்புவதும் (forward) கைப்பேசியை பார்த்தால் தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரின் நகலை வைத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வந்த குறுஞ்செய்தியில் " மாவத்தூர் குளத்தில் மணல் அள்ளிய JCB யை மறித்து பொது மக்கள் சாவியை பிடுங்கி வைத்திருந்ததை கடவூர் தாசில்தாரும், வருவாய் ஆய்வாளரும் பொது மக்களிடம் சாவியை வாங்கி கொடுத்தும் வண்டியை விடுவித்த வருவாய்த்துறையினர் மீது நடவடிக்கை எடுத்து மாவத்தூர் ஊராட்சி மணல் கொள்ளையை தடுக்குமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்கிறார்கள்" என வந்தது என்றால் சரிதான்.

3) நான் எனது புகாரில் வருவாய்த்துறையினர் சாவியை வாங்கும் போது வாதி பழனிச்சாமி அந்த இடத்தில் இல்லை என கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். வாதி அவராக தயார் செய்து மணல் திருட்டை தடுக்க வேண்டுமென எந்த செய்தியும் அனுப்பவில்லை என்றால் சரிதான். வாதி அவதூறாக செய்தியை பரப்புவதாக பொது மக்கள் யாரும் எனக்கு புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி தனக்கு வந்த செய்தியை எங்கள் கவனத்திற்கும் கொண்டு வந்தார் என்றால் அவராக தயார் செய்தாரா அல்லது தனக்கு வந்த

செய்தியை அனுப்பினாரா என்றால் ஞாபகம் இல்லை. துறை சம்பந்தப்பட்ட செய்தியை எங்களுக்கு தெரிவிப்பது மன உளைச்சலை ஏற்படுத்துமா என்றால் இல்லை. வாதி அனுப்பிய செய்திக்கு எங்கள் தரப்பில் இருந்து பதில் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

4) வாதி தனக்கு வந்த செய்தியை எனக்கு தெரியப்படுத்துவதன் மூலம் எங்கள் வேலை எதுவும் பாதிக்கப்படவில்லை என்றால் சரிதான். வாதி அனுப்பிய செய்தியின் மூலம் நடவடிக்கை எடுக்க உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றேனா என்றால் தொலைபேசி மூலம் அனுமதி பெற்றேன். வாய்மொழியாக உத்தரவு பெற்றது குறித்து எனது புகாரில் தெரிவித்து இருக்கிறேனா என்றால் ஞாபகம் இல்லை. வாதி பழனிச்சாமி சம்பந்தமாக பொது மக்கள் யாராவது என்னிடம் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. எனக்கு வந்த செய்தியை கிராம நிர்வாக அலுவலருக்கும், வட்டாட்சியருக்கும் வாதி அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி தெரியவில்லை.

5) மாவத்துார் ஊராட்சி குளத்தில் மணல் அள்ளுவதற்கு வட்டாட்சியரிடம் முன் அனுமதி பெற்றதாக ஏதாவது ஆவணத்தை புகாருடன் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. மாவத்துார் குளம் ஆனது பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ளது என்றும் அதில் முன் அனுமதி இல்லாமல் மணல் அள்ளுவது சட்ட விரோதமாகும் என்றால் சரிதான். எனக்கு அனுப்பப்பட்ட குறுஞ்செய்தில் என்னை பற்றியோ, கிராம நிர்வாக அலுவலர் பற்றியோ தவறாக சித்தரிக்கப்படவில்லை என்றால் சரிதான். எனது புகாரில் வாதி அனுப்பிய குறுஞ்செய்தியானது மன உளைச்சலை ஏற்படுத்தி பணி செய்யாவிடாமல் தடுத்தது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான், வாதி இவ்வாறு பலமுறை தவறான குறுஞ்செய்திகள் அனுப்பியுள்ளார்.

6) எனது புகாரில் வாதி பலமுறை குறுஞ்செய்தி அனுப்பியதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டு தவறான செய்தியை குறிப்பிட்டு புகார் பதிவு செய்திருப்பதாகவும், அந்த முதல் தகவல் அறிக்கையை திரும்ப பெற்றுக்கொள்ளுமாறு எனக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை, என்னிடம் குற்ற வழக்குகள் தள்ளுபடி ஆகி விட்டதால் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். 16.06.2020 ல் வாதி தனக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென கேட்டு எனக்கும், எனது உயர் அதிகாரிகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. 2024 ம் வருடம் தான் அனுப்பியுள்ளார். என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புதல் அட்டையில் வா.சா.ஆ.11 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

7) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட உடன் வாதி நஷ்ட ஈடு கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், வழக்கிற்காக தற்போது அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் என்னிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை, புகார் கொடுத்ததோடு சரி. புகாருக்கு பின்னிட்டு என்னை போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாக குறிப்பிட்டிருந்தால் தவறு தானே என்றால் ஞாபகம் இல்லை. எனது புகாரை பொறுத்து போலீசார் யார் யாரை விசாரணை செய்தார் என தெரியுமா என்றால் தெரியாது. காவல் நிலையத்தில் என்னென்ன ஆவணங்களை கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என தெரியுமா என்றால் தெரியாது.

8) மேற்படி இறுதி அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்படி வழக்கு விசாரிக்க உகந்தது அல்ல என தள்ளுபடி செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கு தள்ளுபடி ஆனதற்கு பின்னிட்டு 2023 ல் வாதி நஷ்ட ஈடு கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். மேற்படி அறிவிப்பிற்கு எங்கள் தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு பின்னிட்டு தள்ளுபடியான புகாரின் மீது மேல்நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் அழைப்பாணை பெற்ற பின்னிட்டு எனது புகார் மீது காவல்துறையினர் தாக்கல் செய்த இறுதி அறிக்கை மற்றும் குற்ற வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை.

9) இந்த வழக்கின் பதிலுரையை தாக்கல் செய்யும் போது மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் தான் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் பிரதிவாதிகள் விபரம் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் அனைவருக்கும் ஒரே வழக்கறிஞரா என்றால் ஆமாம். அரசு வழக்கறிஞர் என்றால் சரிதான். குற்ற வழக்கு குறித்து அனைத்து நடவடிக்கைகளும் எனக்கு நன்கு தெரிந்தும், அது பற்றி கூறினால் எங்களுக்கு எதிராகி விடும் என்பதால் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தனக்கு வந்த தகவலை எங்களுக்கு அனுப்பியதை முறையாக பரிசீலனை செய்யாமல் வாதி மீது கொண்ட காழ்புணர்ச்சி காரணமாக வாதிக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) எனது சாட்சியத்தில் வாதி கொடுத்த செய்தி மூலமாக எங்களுக்கு பணியில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் வாதி இவ்வாறு தவறான செய்திகளை அடிக்கடி இரவு நேரத்தில் கொடுத்து தொல்லை செய்து வந்தார். அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை அரசு அலுவலர்களுடன் சேர்ந்து பொது மக்களும் பாதுகாக்க

வேண்டியது என்றால் சரிதான். அவ்வாறு வாதி தனக்கு வந்த செய்தியை நல்ல எண்ணத்தின் அடிப்படையில் எங்களுக்கு அனுப்பியதை இடையூறு கொடுப்பதாக நான் சொல்வது தவறு என்றால் அவர் கொடுக்கும் ஒவ்வொரு செய்தியும் விசாரணை செய்த பிறகு பொய்யானதாக தான் இருக்கும்.

11) நான் கொடுத்த புகாரை காவல் துறையினர் முறையாக விசாரணை செய்யாமல் வாதியை கைது செய்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி எந்த தவறும் செய்யாதவர், எனது புகாரும் காவல்துறையினர் எடுத்த நடவடிக்கைகள் வாதிக்கு தான் மன உளைச்சலை ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. வாதி இரண்டு முறை அறிவிப்பு கொடுத்தும் எங்கள் தரப்பில் முறையாக பதில் எதுவும் கொடுக்காததால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானும், மற்ற பிரதிவாதிகளும் வழக்கில் கோரும் இழப்பீடை வாதிக்கு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. எங்கள் தவறை மறைக்க பொய்யான சங்கதிகளுடன் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**